-61-

சுருக்கம்

வேளாண்மை – உழவர் நலன் - வேளாண்மைப் பொறியியல் துறை – தனியாருக்குச் சொந்தமான டிராக்டர்களின் உரிமையாளர்களின் விபரங்கள் – வேளாண்மை இயந்திரங்கள், கருவிகள், டீசல் பம்பு செட், மின்சார பம்பு செட், சூரிய மின்சக்தியால் இயங்கும் பம்பு செட் ஆகியவற்றை பழுது நீக்குபவர்களின் விபரங்கள் – இ-வாடகை செயலியில் பதிவேற்றம் செய்தல் – உழவன் செயலியில் இணைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை - உழவர் நலத் (வே.பொ.1) துறை

அரசாணை (நிலை) எண்:83

நாள்:09.05.2023
சோபகிருது வருடம், சித்திரை 26 நாள்
திருவள்ளுவர் ஆண்டு, 2054

படிக்கப்பட்டது :

1. வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2023-2024-ல் சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 21.03.2023 அன்று அறிவிக்கப்பட்ட அறிவிப்பு.
2. தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), கடித எண்.ட்டி1/12837/2023, நாள். 25.03.2023 மற்றும் 04.04.2023.

---

ஆணை:

மேலே ஒன்றில் காணும் வேளாண்மை நிதி நிலை அறிக்கை 2023-2024 -ல், மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 21.03.2023 அன்று சட்டமன்றப் பேரவையில், “விவசாயிகள் உழவுப் பணியினைத் தங்கு தடையின்றி மேற்கொள்ள உதவிடும் பொருட்டு, தனியாருக்குச் சொந்தமான டிராக்டர்களின் உரிமையாளர்கள், வேளாண் இயந்திரங்கள், பம்புசெட்டுகளின் பழுதுகளை சரிசெய்யக் கூடிய, தனியார் பழுது நீக்குபவர்களின் பெயர், விலாசம், கைப்பேசி எண் போன்ற விவரங்கள் வட்டார, மாவட்ட வாரியாக, இ-வாடகை செயலியில் பதிவேற்றம் செய்யப்பட்டு உழவன் செயலியோடும் இணைக்கப்படும்” என்று அறிவித்துள்ளார்கள்.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்)-ன் கருத்துருவில், வேளாண் பணிகளை குறித்த காலத்தே செய்து முடிக்க அதிக நேரமும், அதிக அளவில் வேலையாட்களும் தேவைப்படுகிறது. கால விரயத்தை தவிர்க்கவும், வேலை ஆட்கள் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யவும், வேளாண்மை இயந்திரமயமாக்கல் இன்றியமையாததாகிறது. அதிக விலையுள்ள வேளாண் இயந்திரங்களை வாங்க இயலாத விவசாயிகளுக்கு உதவும் வகையில், வேளாண்மைப் பொறியியல் துறையால் பல்வேறு வேளாண் பணிகளை மேற்கொள்ள வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த வாடகைக்கு வழங்கப்படுகிறது.

அறுவடை காலங்களில், விவசாயிகளுக்கு ஏற்படும் சிரமங்களுக்கு தீர்வாக, தனியாருக்கு சொந்தமான நெல், மக்காச்சோளம், பயறு, தானிய வகைகள் அறுவடை செய்யும் 4,456 இயந்திரங்களின் உரிமையாளர்கள் பெயர், விலாசம், கைப்பேசி எண் போன்ற விபரங்கள் வட்டார, மாவட்ட வாரியாக, உழவன் செயலியில் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இவ்வசதி, காலத்தே பயிர்களை அறுவடை செய்ய விவசாயிகளால் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது.

விவசாயிகள் பல்வேறு வேளாண் பணிகளை காலத்தே மேற்கொள்வதற்கும், சாகுபடி செலவைக் குறைப்பதற்கும், வேளாண் சக்தியை அதிகரிப்பதற்கும், வேலையாட்கள் பற்றாக்குறையை தீர்ப்பதற்கும், வேளாண் இயந்திரமயமாக்கலை சார்ந்துள்ளனர். உழவு முதல் அறுவடை வரை மற்றும் அறுவடைக்குப்பின் தேவைப்படும் சோகை மேலாண்மை உள்ளிட்ட அனைத்து வேளாண் பணிகளுக்கும் டிராக்டர் பயன்படுகிறது. டிராக்டருடன் உரிய இணைப்புக் கருவியை இணைத்து பல்வேறு வேளாண் பணிகளை குறித்த காலத்தில் செய்து முடிப்பதால், வேளாண் உற்பத்தி அதிகரிக்கிறது.

தேவை அதிகரிக்கும் போது, இத்தகைய டிராக்டர்களின் வாடகைத் தொகை உயர்ந்து விடுகிறது. சில சமயங்களில், விவசாயிகள் டிராக்டர் உரிமையாளர்களை இடைத்தரகர்கள் மூலம் தொடர்பு கொள்ள வேண்டியுள்ளது. இவ்விடைத் தரகர்கள் தங்களுக்கான தரகுத் தொகையை பெறுவதன் பொருட்டு வாடகைத் தொகையை மேலும் உயர்த்தி விடுகின்றனர். இதனால் வேளாண் வருமானம் குறைவதால் விவசாயப் பெருமக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகிறார்கள். வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள டிராக்டர்களின் மூலம் விவசாயிகளின் தேவையை ஓரளவே பூர்த்தி செய்ய முடியும். மேலும், தனியார் டிராக்டர் உரிமையாளர்களைப் பற்றிய விபரங்கள் விவசாயிகளுக்கு தெரிவதில்லை. இதனால் விவசாயிகள் காலத்தே உழவுப் பணிகளை மேற்கொள்ள மிகவும் சிரமப்படுகின்றனர். இதற்கு தீர்வாக, விவசாயிகள் உழவுப் பணியினைத் தங்குதடையின்றி மேற்கொள்ள உதவிடும் பொருட்டு விவசாயிகள் அவர் தம் இருப்பிடத்திற்கு அருகில் உள்ள தனியார்

டிராக்டர் உரிமையாளர்களை கைப்பேசி மூலம் தொடர்பு கொண்டு தனியார் டிராக்டர்களை வாடகைக்கு பெற்றிட ஏதுவாக, தனியாருக்குச் சொந்தமான டிராக்டர்களின் உரிமையாளர்கள் பெயர், விலாசம், கைப்பேசி எண் போன்ற விபரங்கள் வட்டார, மாவட்ட வாரியாக, இ-வாடகை செயலியில் பதிவேற்றம் செய்யப்பட்டு உழவன் செயலியோடு இணைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது, என தெரிவித்துள்ளார்.

3. மேலும், வளர்ந்து வரும் மக்கள் தொகையின் தேவையைப் பூர்த்தி செய்ய, வேளாண் உற்பத்தி, உற்பத்தித் திறன் குறுகிய காலத்திற்குள் அதிகரிக்கப்பட வேண்டும். வேலையாட்கள் பற்றாக்குறையால் உரிய நேரத்தில் வேளாண் பணிகளை மேற்கொள்ள இயலாமல், வருவாய் இழப்பு ஏற்பட்டு விவசாயிகள் சிரமப்படுகின்றனர். வேளாண் பணிகளை காலத்தே மேற்கொள்வதற்கு வேளாண் இயந்திரமயமாக்கலே சிறந்த வழியாகும். மேலும், வேளாண் பணிகளை குறித்த காலத்தில் செய்து முடிப்பதற்கு, வேளாண் இயந்திரங்கள் நல்ல நிலையில் இருக்க வேண்டும். இவ்வியந்திரங்கள் நல்ல முறையில் இயங்கிட, நன்கு பராமரிக்கப்பட வேண்டும்.

பயிர் வளர்ச்சிக்கு நீர் மிக முக்கியமான ஆதாரமாகும். டீசல் பம்பு செட்டுகள், மின்சார மோட்டார் பம்பு செட்டுகள் மற்றும் சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் ஆகியவை பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதற்கு மிகவும் உதவிகரமாக உள்ளன. இவை நீர்ப்பாசனத்திற்கு ஏதுவாக நல்ல முறையில் பராமரிக்கப்பட வேண்டும்.

வேளாண் இயந்திரங்கள், கருவிகள், பம்புசெட்களில் பழுது ஏற்படும் பட்சத்தில், வேளாண் பணிகளை உடனுக்குடன் செய்திட, பழுதுகளை உடனடியாக சரி செய்ய வேண்டும். இதற்குத் தீர்வாக வேளாண் இயந்திரங்கள், கருவிகள், பம்புசெட்டுகள் ஆகியவற்றின் பழுது நீக்குபவர்களின் பெயர், விலாசம், கைப்பேசி எண் போன்ற விபரங்கள் வட்டாரம், மாவட்ட வாரியாக இ-வாடகை செயலியில் பதிவேற்றம் செய்யப்பட்டு, உழவன் செயலியோடு இணைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

4. மேலும், தனியார் டிராக்டர் உரிமையாளர்கள், தனியார் மெக்கானிக்குகளின் விபரங்களை இ-வாடகை செயலியில் இடம் பெற செய்வதன் மூலம் வேளாண் இயந்திரங்கள், கருவிகள், பம்பு செட்டுகள் ஆகியவற்றின் பயனற்ற நேரத்தை குறைக்க உதவுவதாக இருக்கும். மேலும், காலத்தே வேளாண் பணிகளை மேற்கொள்ள உதவுவதோடு, உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்க வழிவகுக்கும். கிராமப்புற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கி அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தவும் இது உதவியாக இருக்கும்.

5. இதனைத் தொடர்ந்து, பின்வருவனவற்றை செய்திட அனுமதி வழங்கும்படி தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), கோரியுள்ளார்:-

i. தனியாருக்குச் சொந்தமான டிராக்டர்களின் உரிமையாளர்கள் பெயர், விலாசம், கைப்பேசி எண் போன்ற விபரங்கள் வேளாண்மைப் பொறியியல் துறையால் வட்டார, மாவட்ட வாரியாக, இ-வாடகை செயலியில் இடம் பெற செய்து உழவன் செயலியோடு இணைப்பதற்கும்,

ii. வேளாண் இயந்திரங்கள், கருவிகள், டீசல் பம்பு செட்டுகள், மின்சார மோட்டார் பம்பு செட்டுகள் மற்றும் சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் ஆகியவற்றின் பழுது நீக்குபவர்களின் பெயர், விலாசம், கைப்பேசி எண் போன்ற விபரங்கள் வட்டார, மாவட்ட வாரியாக, இ-வாடகை செயலியில் இடம் பெற செய்து உழவன் செயலியோடு இணைப்பதற்கும்,

6. இந்நிலையில், தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்)-வின் கருத்துருவினை, அரசு கவனமுடன் நன்கு பரிசீலனை செய்து, அதனை ஏற்று, பின்வரும் இனங்களை செய்திட தலைமைப் பொறியாளார் (வேளாண்மைப் பொறியியல்) -க்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது:-

i. தனியாருக்குச் சொந்தமான டிராக்டர்களின் உரிமையாளர்கள் பெயர், விலாசம், கைப்பேசி எண் போன்ற விபரங்கள் வேளாண்மைப் பொறியியல் துறையால் வட்டார, மாவட்ட வாரியாக, இ-வாடகை செயலியில் இடம் பெற செய்து உழவன் செயலியோடு இணைப்பதற்கும்,

ii. வேளாண் இயந்திரங்கள், கருவிகள், டீசல் பம்பு செட்டுகள், மின்சார மோட்டார் பம்பு செட்டுகள் மற்றும் சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் ஆகியவற்றின் பழுது நீக்குபவர்களின் பெயர், விலாசம், கைப்பேசி எண் போன்ற விபரங்கள் வட்டார, மாவட்ட வாரியாக, இ-வாடகை செயலியில் இடம் பெற செய்து உழவன் செயலியோடு இணைப்பதற்கும்,

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சி. சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசுச் செயலாளர்**

பெறுநர்

தலைமைப் பொறியாளர், (வேளாண்மைப் பொறியியல்), சென்னை-35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-35.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை -18. (பெயரில்).

முதன்மை மாநிலக் கணக்காயர் (G & SSA / E & RSA), சென்னை-18.
இருப்பிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநிலக் கணக்காயர் அலுவலகம்,
(சமூகத் தணிக்கைப்பிரிவு) சென்னை-9.

நகல்:-

வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளரின் தனிச்செயலர்,
வேளாண்மை - உழவர் நலத் துறை, சென்னை-9.
நிதி (வேளாண்மை-உ.ந)/(வசெ.2) த்துறை, சென்னை-9.
வேளாண்மை - உழவர் நலத் (அ.ந.மு.3) துறை, சென்னை -9
உதவி நிரலர், வேளாண்மை - உழவர் நலத் துறை, சென்னை-9.
கோ.எண். 4414312/வேபொ.1/2023
இருப்பு கோப்பு / உதிரி நகல்கள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர் 10/05/24